
புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • டிசம்பர் 19, 2024 • புரட்சி 24 • முழக்கம் 50 • விலை ரூ.3.00



## வீடியோ தில்லுமுல்லு: வேத பண்டிதர் ரங்கராஜன் கைது!

வேதத்தின் வடிவமாக தன்னைப் பாராட்டிக் கொள்ளும் ஸ்ரீ ரங்கம் ரங்கராஜன் நரசிம்மன். சனாதன மதம் தான் ‘இந்துமதம்’ இந்துமதம் என்ற ஒன்று இல்லை. நான் இப்பெயரை உச்சரிக்கவே மாட்டேன்” என்று உண்மையை கக்கினார்.

பேட்டிகளில், வர்ணாஸ்ரமத்தை வெளிப்படையாகப் பேசுகிறவர், ‘பிராமணர்களை’த்தவிர ஏனையவர் அர்ச்சகராவதை வேதம் அனுமதிக்க வில்லை என்று பேசினார். ஆகமப் பயிற்சிப் பெற்ற இரண்டு அர்ச்சகர்கள் நியமனத்தை எதிர்த்து வழக்குத் தொடுத்தார். மதுரை கிளை உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர். சாமிநாதன், இரண்டு அர்ச்சகர்கள் நியமனம் ஆகமத்துக்கு எதிரானது என்று கூறி அர்ச்சகர் நியமனத்தை ரத்து செய்தார்.

ஆகமும் வேதமும் பேசிய வேத பண்டிதர் ரங்கராஜன், துணை முதல்வர் உதயநிதி பற்றி அவதூறு பரப்பிய வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார். ஸ்ரீ பெரம்புதூர் எம்.ஆர்.ஜீயர் என்பவர் தன்னிடம் பேசிய தொலைப்பேசி உரையாடலை மோசடி செய்துத் திருத்தி யூடியுப்பில் வெளியிட்டதாகப் புகார் கொடுத்தார்.

துணை முதல்வர் உதயநிதி தங்களிடம் ‘பிராமண தோஷம்’ கழிந்ததாக ஜீயர் கூறியதாக ரங்கராஜன் யூடியுப்பில் வெளியிட்டு ள்ளது உண்மையல்ல. அவ்வாறு தான் கூறவில்லை என்று ரங்கராஜன் மீது காவல்துறையில் புகாரில் கூறியிருந்தார். மத்தியப் பிரிவுப் போலீசார் 5 பிரிவுகளின் கீழ் வழக்குபதிவு செய்து ரங்கராஜனை வீட்டில் கைது செய்து விசாரணை நடத்தினர். பிறகு நீதிமன்றத்தில் நிறுத்தி ரிமாண்ட் ஆணை பெற்று சிறையில் அடைத்தனர்.

எதிரிகளைச் சாகடிப்பதற்கு வேத மந்திரங்கள் இருக்கின்றன. அசுரர்களை (திராவிடர்களை) அழிப்பதற்கு பார்ப்பனர்கள் யாகம் நடத்தியுள்ளனர். வைக்கம் போராட்டத்தில் பெரியார் இறக்க வேண்டும் என்று சத்ரு சம்ஹார யாகம் நடத்தினர்.

யாகத்துக்கு சக்தி எல்லாம் ஒன்றும் கிடையாது என்று முடிவெடுத்த ரங்கராஜன் நரசிம்மன், யூடியுப் தான் வேதத்தை விட சக்தி மிக்கது என்ற முடிவுக்கு வந்தார். அதிலும் தில்லுமுல்லு செய்து வெட்டி ஒட்டுதல் செய்யவும் தயாரானார். இப்போது கைது செய்யப்பட்டு ஜாமீன் கேட்டுக் கொண்டிருக்கிறார். ஜாமீன் பெற வேத மந்திரம் இருக்கிறதா? என்பது தெரியவில்லை.

### ஆங்கில நாளேடுகள் பாராட்டு

# மகளிர் உரிமைத் திட்டத்தின் வெற்றி!

***மகளிர் உரிமைத் திட்டத்திலும், முதலீடுகளை ஈர்ப்பதிலும் தமிழ்நாடு சாதனைப் படைக்கிறது என்று ஆங்கில நாளேடுகள் பாராட்டு.***

*தமிழ்நாடு அரசின் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் சமூகத்தில் பெண்களிடையே மிகப்பெரிய முன்னேற்றத்துக்கு பயன்பட்டுவருகிறது என்று ‘இந்து’ ஆங்கில நாளேடு (டிசம்பர் 15) விரிவான ஆய்வுக் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது. மூன்று பண்பு மாற்றங்களை அக்கட்டுரை சுட்டிக்காட்டியுள்ளது. பெண்கள் இளம் வயதில் திருமணம் செய்து வைப்பதைத் தடுத்திருக்கிறது. உயர்கல்விப் பெறும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எல்லாவற்றையும் விட படிப்பைத் தொடருவதை உறுதிப்படுத்தியுள்ளது.*

*திட்டக்குழுத் திரட்டியுள்ள தகவல்களின் படி 2,30,520 மாணவர்கள் மாதம் தோறும் 1000 ஊக்கத்தொகை பெறுகிறார்கள். மாதம்தோறும் அவர்களது வங்கிக் கணக்கில் இது செலுத்தப்பட்டு வருகிறது. இதில் அதிகம் பயன்பெறும் மாவட்டம் சேலம். (17,032 பேர் - 7.38 சதவீதம்) இரண்டாவது நாமக்கல் (13.312 - 5.77 சதவீதம்) அடுத்து தர்மபுரி (11,915 - 5.16 சதவீதம்) சென்னை (11,468 - 4.97 சதவீதம்) திருவண்ணாமலை (11,146 - 4.83 சதவீதம்) கோவை (10,777 - 4.67 சதவீதம்)*

*இத்திட்டம் அமலான பிறகு இடைநிற்றல் குறைந்ததுடன் மாணவர் சேர்க்கை அதிகரித்துள்ளது என்று முதல்வர் கூறியுள்ளார்.*

*அரசுப் பள்ளிகளில் படித்த மாணவிகளுக்கு உயர்க் கல்விப் பயணத்தைத் தொடரும் நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட இத்திட்டத்தால் கிராமப்புற மாணவிகள் மிகவும் பயனடைந்துள்ளனர். திட்டத்தை அறிவித்ததோடு நிற்கவில்லை. மாணவிகளைச் சந்தித்து அவர்களை உயர்கல்வி நோக்கி வரவழைக்கவும் களப்பணிகளைத் செய்துவருகிறது என்று கல்வி அமைச்சர் அன்பில் மகேஸ் கூறுகிறார்.*

*பள்ளி மாணவிகளைக் கல்லூரிக்கு வரவழைத்து அவர்களுக்கு எந்தெந்த கல்லூரிகளில், எந்தெந்த பாடங்கள், ஆய்வகங்கள், விளையாட்டு மைதானங்கள் பற்றி எடுத்துக் கூறுகிறோம். அவர்கள் விருப்பத்துக்கு ஏற்ப கல்லூரிகளைத் தேர்வு செய்ய பரிந்துரைக்கிறோம் என்று அன்பில் மகேஸ் கூறுகிறார்.*

*கிராமப்புற மாணவர்கள் வங்கிக் கணக்கு தொடரவும், வங்கி வரவு - செலவு குறித்த அனுபவங்களைப் பெறவும் இத்திட்டம் உதவி வருகிறது.*

*மாணவிகள் மற்றும் பெற்றோர்களின் பேட்டிகள் அக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளன. நல்லவேலை கிடைப்பதற்கும், நிலைத்த வருமானத்துக்கும், தங்களின் ஆளுமையை வளர்த்துக் கொள்ளவும், எதிர்கால சேமிப்புக்கும், இளம் வயது திருமணங்களைத் தடுப்பதற்கும் இத்திட்டம் உதவுவதாக மாணவிகள் கூறுகிறார்கள்.*

*பட்டியல் இனப் பிரிவில் 38.6 சதவீதப் பெண்களும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் 34.4 சதவீதத்தினரும் பிற்படுத்தப்பட்டோரில் 24.8 சதவீதத்தினரு0ம் பயனடைவதாக திட்டக்குழு ஆய்வு தெரிவிக்கிறது.*

### முதலீடுகளை ஈர்க்கும் தமிழ்நாடு

*இந்தியாவிலேயே தொழில் முதலீட்டுக்கு தமிழ்நாடே சிறந்த மாநிலமாக எங்களைக் கவர்ந்து நிற்கிறது என்று தொழில் முனைவோர்கள் கூறுகிறார்கள். இது குறித்து ‘டைமஸ் ஆஃப் இந்தியா நாளேடு’ (டிசம்பர் 16) விரிவான கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது. பல தொழிலதிபர்களின் பேட்டிகளை இந்த ஏடு பதிவு செய்துள்ளது.*

*எல்லா நகரங்களை விடவும் நம்பி, பாதுகாப்புடன் தொழில் செய்யக்கூடிய சிறந்த நகரமாக இந்தியாவிலேயே சென்னை மட்டும் தான் என்பது ஒருமித்தக் கருத்தாக இருந்தது என்கிறார் பெண் தொழிலதிபர் அடிலைன் கிரஹாம். அவர் நவீன மேசை நாற்காலிகள் தயாரிக்கும் தொழிற்சாலையை நடத்தி வருகிறார். பல தொழில் நிறுவனங்களின் தலைமை அதிகாரிகள் பேட்டி அளித்துள்ளனர்.*

*இதே கருத்தை அவர்களும் உறுதி செய்கிறார்கள். சென்னையில் உள்ள ஜெர்மன் தூதரக தலைமை பெண் அதிகாரி முல்லர் அளித்துள்ள பேட்டியில் ஜெர்மனியர்கள், தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கே விரும்புகிறார்கள் என்று கூறியுள்ளார். தமிழ்நாட்டில் 120 ஜெர்மன் தொழில் நிறுவனங்கள் வெற்றிகரமாக செயல்படுவதைச் சுட்டிக்காட்டினார். தமிழ்நாடு அரசு தரும் உதவி, கல்வியில் முதலிடம், திறமையான தொழிலாளர்கள், குறிப்பாக பெண்கள் இதைச் சாத்தியமாக்குகின்றனர் என்று பெருமையுடன் கூறுகிறார்கள்.*

*கடந்தகால ஆட்சியாளர்களில் தொழில் முதலீடு செய்வோரிடம், பெரும் தொகையை லஞ்சமாகக் கேட்கப்பட்டதால் அவர்கள் வேறு மாநிலத்துக்குச் சென்ற கதைகள் உண்டு. இப்போது அந்த நிலை மாறிப் போய், முதலீட்டுக்கு ஏற்ற மாநிலமாகியிருக்கிறது.*

# இட ஒதுக்கீடு விவரங்களை இருட்டடிக்கும் ஒன்றிய அரசு

*ஒன்றிய அரசின் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகம் (DOPT) 2023-24ஆம் ஆண்டுக்கான அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் ஒன்றிய ஆட்சியில் வேலை, பதவி உயர்வுத் தொடர்பானத் தரவுகள் முழுமையாக இருட்டடிக்கப்பட்டுள்ளன.*

*ஆண்டுதோறும் வெளியிடப் படும் அறிக்கையில், பட்டியலினம், பழங்குடி, பிற்படுத்தப்பட்டோர், ஏ.பி.சி.டி.பிரிவு பதவிகளில் எவ்வளவு சதவீதம் இருக்கிறார்கள் என்ற புள்ளி விவரங்கள் இடம்பெறும். இவ்வாண்டு வெளியிடப்பட்ட அறிக்கையில் அந்த அத்தியாயம் ஏன் இடம் பெறவில்லை என்று ஆங்கில ‘இந்து’ ஏடு எழுத்துப்பூர்வக் கேள்விக்கு, துறையிடம் இருந்து பதில் இல்லை. டெல்லியில் கடந்த டிசம்பர் 2ஆம் தேதி நடைபெற்ற சமூகநீதி மாநாட்டில் பங்கேற்ற சமூகநீதித் தலைவர்கள், இதைக் குறிப்பிட்டுக் கண்டனம் தெரிவித்துள்ளனர்.*

*மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பேசிய பிருந்தா காரத், “விளிம்புநிலை மக்களை அதிகாரமற்றவர்களாக்கும் சதி நடக்கிறது. அவர்களைப் பற்றிய தகவல்கள் முழுமையாக இருட்டடிக்கப்பட்டதால் அவர்கள் நீதிமன்றம் செல்லும் உரிமை பறிக்கப்பட்டுள்ளது. இட ஒதுக்கீட்டின் கீழ் நிரப்பப்பட்ட இடங்கள் மற்றும் காலியாக உள்ள இடங்கள் பற்றி அவர்களுக்கே தெரிவிக்கப்படவில்லை” என்றார்.*

*ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகப் பேராசிரியர் விகாஸ் ராவ் பேசுகையில், 2018 முதலே முழுமையான தகவல்கள் தெரிவிக்கப்படவில்லை. நிதி அமைச்சகத்தின் ஊதியம் வழங்கும் ஆய்வு ஆவணங்களைப் பரிசோதித்துப் பார்த்த போது, 30 லட்சத்துக்குக் கூடுதலாக ஒன்றிய ஆட்சியில் அரசு ஊழியர்கள் பணியாற்றுவதாகக் காணப்படுகிறது. ஆனால் 2018ஆம் ஆண்டு துறையின் ஆண்டு அறிக்கையில் 19 லட்சம் பணியாளர்கள் பற்றிய விவரங்களே தரப்படுகின்றன. அவர்களுக்கான இட ஒதுக்கீடுகளின் எண்ணிக்கை மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. எஞ்சிய 11 லட்சம் பணியாளர்கள் பற்றிய தகவல்களே இல்லை. அவர்கள் இட ஒதுக்கீட்டின் கீழ் கொண்டு வரப்படுகிறார்களா? அல்லது வேலையை விட்டு வெளியேறிவிட்டார்களா? என்ற செய்திகள் மறைக்கப்பட்டுள்ளன என்றார்.*

*அனைத்து அரசுப் பணிகள், அமைச்சகப் பணிகள், வங்கிகள், கல்வி மற்றும் அரசு நிதி நிறுவனங்கள், சுகாதாரத்துறை ஊழியர்கள், திட்டப் பணியாளர்கள், ஒப்பந்தப் பணிகள், தனியார் துறைகள் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் பணியாற்றுவோர் மற்றும் இடஒதுக்கீடு பற்றிய முழு விவரங்களையும் வெளியிட வேண்டும் என்று மாநாடு வலியுறுத்தியுள்ளது.*

**தலையங்கம்**

# ‘மனு’வின் ஆட்சி!

அரசியல் சட்டத்தைப் பின்னுக்குத்தள்ளி விட்டு மனுஸ்மிருதியைச் சட்டமாக்கிவிட்டது ஒன்றிய ஆட்சி என்று நாடாளுமன்றத்தில், எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் நிகழ்த்திய உரை வரலாற்றுச் சிறப்புடையதாகும்.

‘‘மனுஸ்மிருதி தான் நமது தேசத்தின் ஆன்மீகம் மற்றும் தெய்வீகப் பயணத்தின் குறியீடு. வேதங்களுக்குப் பிறகு மிகவும் வணங்குவதற்கு உரியது. நமது அரசியல் சட்டத்தில் இந்தியர்களுக்கு என்று எதுவுமில்லை’’ என்ற இந்துமகா சபைத் தலைவர் சாவர்க்கர் உரையை மேற்கோள் காட்டி தனது உரையைத் தொடங்கினார் ராகுல்.

‘‘பிராமண’’ – ‘‘சூத்திர’’ப் பாகுபாடுகளை விதியாக வகுத்துத் தருவது ’மனுஸ்மிருதி’. பிறப்பால் உயர்ந்த குலத்தவன் பிராமணன், சூத்திரன் அடிமை, இழிகுலம், வெறுக்கத்தக்கவன் என்ற கொடிய நஞ்சைக் கக்குவது மனுஸ்மிருதி. மனு சாஸ்திரத்தை தமிழ்நாடு முழுவதும் எரிக்கும் போராட்டத்தைத் திராவிடர் விடுதலைக் கழகம் அம்பேத்கர் பிறந்தநாளில் (ஏப் 14,2013) நடத்தியது. அதுவும் பெண்கள் தலைமையில் நடத்தியது. 1927, டிசம்பர் 25இல் அம்பேத்கர், மனுஸ்மிருதி எரிக்கும் போராட்டத்தை நடத்தினார். தனது பார்ப்பன நண்பரான கங்காதர் நீல்கார்க் கரங்களில் கொடுத்து எரிக்க வைத்தார்.

மனுஸ்மிருதியை எரித்த அம்பேத்கர் அரசியல் சட்ட வரைவுக்குழுத் தலைவராக இருந்து, சட்டத்தை உருவாக்கி அதில் முதன்மையான பங்கு வகித்தார், அம்பேத்கர் எரித்த மனு சாஸ்திரத்தையும், அம்பேத்கர் உருவாக்கிய அரசியல் சட்டத்தையும் இரு கரங்களில் ஏந்தி, ராகுல் அரசியல் சட்டத்தை மனுஸ்மிருதியால் ஒன்றிய ஆட்சி நசுக்குகிறது என்று குற்றம்சாட்டியிருக்கிறார்.

ஒன்றிய ஆட்சி திணித்து வரும் ‘இந்துத்துவா’ என்ற அரசியல் கோட்பாடு மனுஸ்மிருதியின் மறு பதிப்பு தான் என்று உறுதியாகக் கூறலாம். அந்த அரசியல் சொல்லாடலை வழங்கிவரும் மனுஸ்மிருதியே நமக்கான சட்டம் என்று கூறிய சாவர்க்கர் தான்.

‘இந்துராஷ்டிரம்’ என்ற ‘இராமராஜ்ஜியம்’ மன்னர் ஆட்சி வழியாகவே நிறுவ முடியும். ஜனநாயகம் பேசும் இந்திய அரசியல் சட்டம் மன்னராட்சி முறையை ஒழித்துவிட்டது. எனவே சட்டத்தின் ஜனநாயகம் – மதச்சார்பின்மை என்ற கூறுகளைப் படிப்படியாகப் பலவீனப்படுத்தி, அதில் இந்துராஷ்ராவுக்கான ‘பாகுபாடு’ ஒடுக்குமுறைப் பிரிவுகளைச் சட்டத்துக்குள் புகுத்துவதற்கான முயற்சிகளே இப்போது நடக்கின்றன.

மதச்சார்பின்மை என்ற சொல் அதற்குத் தடையாக நிற்கிறது. அது அவசர நிலை காலத்தில் புகுத்தப்பட்ட சொல் என்பதால், நீக்கிவிட வேண்டும் என்கிறார்கள். மதப்பாகுபாடுகள் அரசியல் சட்டத்தில் (பிரிவு 15,25,28) தடை செய்யப்பட்டுள்ளதால், ‘மதச்சார்பின்மை’ என்ற ’ஸ்டிக்கர்’ ஒட்டத் தேவையில்லை என்று அம்பேத்கர் அரசியல் நிர்ணய சபையில் நடந்த விவாதத்திலேயே அதற்கு விளக்கமளித்துவிட்டார்.

இந்து ராஷ்டிரத்துக்கு மற்றொரு தடையாக இருப்பது மொழிவழிப் பிரிந்துள்ள மாநிலங்கள். எனவே மாநிலங்களின் அடையாள அழிப்புக்குத் திட்டமிட்டு காய்களை நகர்த்துகிறது ஒன்றிய ஆட்சி. கல்வி. சுகாதாரம், வரி விதிப்பு, நிதி ஒதுக்கல், மாநில அரசுக்கான திட்டமிடும் உரிமைகள், சுற்றுச்சூழல் மற்றும் கனிம உரிமைகள் உள்ளிட்டவற்றில் தலையிட்டு ஒன்றிய ஆட்சி, கொள்கைகளையும், சட்டத் திருந்தங்களையும் திணித்துக் கொண்டிருக்கிறது. கிரிமினல் சட்டங்களுக்கு இந்தியில் பெயர் சூட்டப்படுகிறது. ஒன்றிய ஆட்சியின் திட்டங்களுக்கு ‘இந்து ராஷ்டிராவின்’ தெய்வீக மொழியான சமஸ்கிருதப் பெயர் சூட்டப்படுகிறது. மாநில மொழிகளுக்கான வளர்ச்சி நிதி ஒதுக்கீட்டில் மக்களே பேசாத சமஸ்கிருதத்துக்கு பல மடங்கு நிதி ஒதுக்கப்படுகிறது.

வர்ணாஸ்ரமத்தை மீறி தவம் செய்த ‘சூத்திரன்’ சம்பூகனுக்கு மரண தண்டனை வழங்கிய இராமனைத் தேசியக் கடவுளாக்கிக் கோயில் கட்டுகிறார்கள். நாடாளுமன்றத்தின் புதியக் கட்டடத்தை ‘வேத முறைப்படி’ ‘இந்து’ சடங்குகளோடு நடத்துகிறார்கள். நாடாளுமன்றத்தின் தலைவராக அரசியல் சட்டம் கூறும் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு அந்த நிகழ்ச்சிக்கு அழைக்கப்படவே இல்லை. காரணம் அவர் ‘சம்பூகன்’ வழிவந்த பழங்குடி சமூகத்தைச் சார்ந்தப் பெண்.

மக்களாட்சிக்கு மாற்றாக அதிபர் ஆட்சி முறையைக் கொண்டு வரும் நோக்கத்தோடு ‘ஒரே நாடு – ஒரே தேர்தல்’ என்ற மசோதாவை நாடாளுமன்றத்தில் கொண்டுவந்து நாடாளுமன்றக் கூட்டுக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. வைதீகப் பார்ப்பனிய மதத்தின் பிடியில் இருந்துப் பல தலைமுறைக்கு முன் வெளியேறிய இஸ்லாமியர் – கிருஸ்துவர்களின் மத அடையாளங்களும், உரிமைகளும் பறிக்கப்பட்டுவருகின்றன.

1991ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்தம், மத நிறுவனங்கள் இடிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தியிருக்கிறது. 1947 – ஆகஸ்ட் 15க்குப் பிறகு கோயில், மசூதி, சர்ச்சுகள் உள்ளிட்ட வழிபாட்டு இடங்கள், அப்படியே நீடிக்க வேண்டும் என்று கூறுகிறது. இந்த சட்டத் திருத்தத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு வந்துவிட்டது. நீதிமன்றத் தீர்ப்புக்காக நாடு காத்துக் கொண்டிருக்கிறது.

இஸ்லாமியர்களுக்கான நலத்திட்டங்கள் நிறுத்தப்படுகின்றன. வக்பு வாரியத்தில் இந்துக்களை உறுப்பினராக்க சட்டத்தைத் திருத்துகிறார்கள். ‘குடியுரிமை’ சட்டத்தில் மத அடையாளத்தைப் புகுத்திச் சட்டத்தைத் திருத்துகிறார்கள். பொது சிவில் சட்டம் கொண்டுவந்து சிறுபான்மையினரின் மத அடையாளங்களை பறிக்க வேண்டும் என்கிறார்கள். பாகுபாடுகளையும், இழிவுகளையும் சுமந்து கொண்டிருக்கும் இந்து சமூகத்தில் அனைவரையும் சமத்துவமாக்க பொது சிவில் சட்டத்தைக் கொண்டுவர தயாராக இல்லை. காரணம் என்ன? இந்த ‘இழிவும்’ ’பாகுபாடும்’ தான்பார்ப்பனியத்தின் கொள்கை. இதுவே இந்துராஷ்டிரத்தின் நோக்கம்.

பொதுத்துறை நிறுவனங்களை அரசிடமிருந்துப் பறித்து அம்பானி – அதானி என்ற ’இந்துத்துவா’ தனியார் பெரு முதலாளிகளிடம் தாரை வார்க்கிறார்கள். மசூதிகள் ஒவ்வொன்றாக இடிக்க வேண்டும் என்றும், அதற்கு கீழே இந்துக் கோயில்கள் இருக்கிறது என்றும், ‘கடப்பாறை’ யை தூக்குகிறார்கள்.

எச்சரிக்கிறார் ராகுல்!

# இளையராஜாவின் சுயமரியாதை

“ஆண்டாள் கோயிலில் ஒன்றும் நடக்கவில்லை. எல்லாம் வீண் வதந்தி. அப்படியெல்லாம் என் சுயமரியாதையை விட்டுவிட மாட்டேன், ரசிகர்களே நம்புங்கள்” என்கிறார் இளையராஜா.

தொலைக்காட்சிகள் அர்த்த மண்டபத்துக்கு வெளியே அவர் நிற்பதை ஒளிபரப்புகின்றன. அவருடன் நின்ற ஜீயர் மட்டும் மண்டபதுக்குள்ளே நுழைவதையும் கேமிராக்கள் காட்டுகின்றன. வதந்திகள் எப்படி கேமிராவுக்கள் நுழைந்தது என்று கேட்காதீர்கள்.

இளைய ராஜாவே ஒரு கடவுள். ஆனாலும் கருவறைக்குள் எல்லோரும் போக முடியாது என்கிறார் ”அந்தப்புறப் பேச்சு”ப் புகழ் கஸ்தூரி

ஒருமுறை பெரியார் திடலில் இளையராஜாவுக்குப் பாராட்டு விழா நடந்தது.சிம்பொனி இசையமைத்ததற்காக பெரியார் தமிழிசை மன்ற நா.அருணாச்சலம் ஏற்பாடு செய்த நிகழ்ச்சி. பெரியார் திடலில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு மாலை போட அழைத்தார்கள். “முடியாது; நான் கடவுள் நம்பிக்கைக்காரன். பெரியாருக்கு எப்படி மாலை போட முடியும்” என்றார் இசைஞானி.

சுயமரியாதை இயக்கத் தலைவர் பெரியாருக்கு தனது சுயமரியாதையைக் காப்பாற்ற மாலை போட மறுத்தவர். இப்போது அர்த்த மண்டப அவமானத்தை அப்படியே துடைத்தெரிந்துவிட்டு, நான் சுயமரியாதைக்காரன் என்கிறார்.

”நான் என்னையே கடந்து விட்டேன். என்னுடைய ஆன்மீகம் அவமானத்தைப் புறந்தள்ளி விடும்” என்பதே இளையராஜா கருத்தாக இருக்கும் என்று எதிர்ப்பார்த்தோம். அவர் ஏமாற்றவில்லை. அவமானத்தைத் ஆன்மீகத்தால் துடைத்துக் கொண்டார்,

“பெரியார் திரைப்படத்திற்கு இசையமைக்க முதலில் ஒப்புக்கொண்ட இளையராஜா, பிறகு மறுத்துவிட்டார். பெரியாரை மறுப்பார், ஜீயர்களின் அவமதிப்பை தலை வணங்கி ஏற்பார். இதில் தான் அவரது சுயமரியாதையே அடங்கியிருக்கிறது.

திருவரங்கம் கோயில் கோபுரம் கட்ட 8 லட்சம் நிதி திரட்டினார். அந்தக் கோபுர விமானத்தில் ஏறுவதற்குக் கூட அனுமதிக்கவில்லை. கோபுரம், கர்ப்பகிரகமோ, அர்த்த மண்டபமோ அல்ல, சூத்திரர்கள் கோயிலுக்குள் நுழையாமல் வீதியில் நின்று தரிசிக்க கண்டுபிடிக்கப்பட்டது தான் கோபுரம்.

அம்பேத்கர் என்ற பெயரை அவர் உச்சரித்ததே இல்லை. திடீரென்று ஒருமுறை அம்பேத்கர் பெயரைக் கூறினார். பிரதமர் மோடி அம்பேத்கரைப் போன்றவர் என்றார். அது என்னப்பா திடீர் பாசம்? பிறகு தான், பா.ஜ.க. அறிவிப்பு வந்தது. மாநிலங்களவை உறுப்பினர் பதவி என்ற அறிவிப்பு வந்தது. மாநிலங்களவையில் அவர் இருக்கையில் சென்று ஒருமுறையாவது அமர்ந்தாரா என்பது தெரியவில்லை. அவரது ஆன்மீகம் தடை செய்திருக்கலாம்; ஆன்மீகம் பதவியை ஏற்கும். ஆனால் பதவிக்கான கடமையை மறுக்கும்.

ஆன்மீகத்துக்கு பொருளியல் சக்தி உண்டா என்பது பற்றி நமக்குத் தெரியவில்லை. தன்னுடைய பாடலை எஸ்.பி.பாலசுப்பிரமணியம் வெளிநாட்டு நிகழ்ச்சிகளில் பாடியதற்காக உரிமைத் தொகை கேட்டார். ஆனலும் பாடலைக் கேட்டு கைதட்டி மகிழ்ந்த ரசிகர்களும், ஒவ்வொரு கைதட்டலுக்கும் கணக்கிட்டு உரிமைத் தொகை கேட்காமல் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டதைப் பாராட்டத்தான் வேண்டும். அதற்காக நீதிமன்றம் வரை சென்றது அவரது ஆன்மீகம். இசை அமைப்புக்காக படத் தயாரிப்பாளரிடம் ஊதியம் வாங்கியாகிவிட்டது. பிறகு பாடலை பாடும் போது எனக்கான உரிமைத் தொகையை எடுத்து வை என்று கேட்பது ஆன்மீகமா? வணிகமா? என்று கேட்கக் கூடாது.

அவரது உடன்பிறந்த தம்பி கங்கை அமரனே கொதித்து எழுந்தார். மோடியை அம்பேத்கருடன் ஒப்பிட்ட ஒரு மாதத்திலேயே அவரது மகன் யுவன் சங்கர் ராஜா, “நான் ஒரு கருப்பு திராவிடன்; பெருமைமிகுத் தமிழன்” என்று முகநூலில் பதிவிட்டார். இப்படி பல சுயமரியாதைக் குடும்பக் கதைகள் இருக்கின்றன.

“உயிர் போன பிறகு மீண்டும் உயிர்பெற்று வந்தவர் ரமண மகிரிஷி மட்டும் தான். இயேசு உயிர்த்தெழுந்தார் என்பது பொய்” என்று ஒரு பேட்டியளித்தார். அவரது ஆன்மீகம் அறிவியல் வரை இப்படி பரந்து விரிந்தது. மீண்டும் உயிர்த்தெழுந்த ரமண மகரிஷி இப்போது இளையராஜா இதயத்தில் மட்டும் உயிரோடு வாழ்ந்து கொண்டிருப்பார் என்று நம்புவோம்.

“புது ராகம் படைப்பதாலே நானும் இறைவனே” – இது இளையராஜாவின் பாடல். இப்படி புது ராகம் படைத்து இசைக்கு அவர் “இறைவனாக” உரிமைக் கோரலாம். அவருக்கு முழுத் தகுதி உண்டு.

ஆனால் அவர் பேசும் ஆன்மீகம் தான் சகிக்க முடியவில்லை.

கோடங்குடி மாரிமுத்து

# கருத்துரிமையை நசுக்கும் நாடாளுமன்றம்

இந்த முறை கூட கடந்த மாதம் 25ஆம் தேதி குளிர்கால கூட்டத் தொடர் தொடங்கியதில் இருந்து தொடர்ந்து அமளி காரணமாக மக்களவை, மாநிலங்களவை தொடர்ச்சியாக முடங்கி வருகிறது. சூரிய ஒளி மின்சக்தி திட்டங்களை பெற தொழிலதி பர் அதானி இந்திய அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்ததாக அமெரிக்காக் கூறிய குற்றச்சாட்டு குறித்து விவாதம் நடத்த வேண்டுமென்பது காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் கோரிக்கை. ஆனால் இதற்கு அரசு மறுத்ததால் ஆரம்பத்தில் அமளி ஏற்பட்டது. இந்த அமளி ஓரிரு நாளில் அடங்கக் கூடிய சூழல் உருவான நிலையில், குற்றச்சாட்டைத்திசை திருப்பவும். அமளியை அடங்காமல் பாது காக்கவும், காங்கிரஸ் மேலிடத் திற்கும் அமெரிக்க தொழிலதிபர் சோரசுக்கும் தொடர்பிருப்பதாக வும் எந்த ஆதாரமும் இல்லாமல் பாஜ குற்றம்சாட்டியது.

இதுதொடர்பாக விவாதிக்க மாநிலங்களவை தலைவர் ஜெகதீப் தன்கர் அனுமதி அளித்ததைத் தொடர்ந்து மீண்டும் அமளி வெடித்தது. அரசியலமைப்பு குறித்து மக்களவையிலும், மாநிலங்களவையிலும் விவாதம் நடத்த தேதி குறித்த நிலையில், அதுதொடர்பான விவாதம் தொடங்கும் முந்தைய நாள் “ஒரே நாடு – ஒரே தேர்தல்” சட்ட மசோதாவுக்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளிக்கிறது. இதன் மூலம் நாடாளுமன்றத்தில் எந்த விவாதமும் முறையாக நடந்து விடக் கூடாது என்பதில் பா.ஜ. பக்கா பிளான் போட்டு வேலை செய்வது உறுதியாவதாக எதிர்க்கட்சி எம்பிக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

ஒரே நாடு ஒரே தேர்தல் சட்ட மசோதாவை நிறைவேற்ற அவை யில் 3ல் 2 பங்கு பலம் தேவை. இத்தகைய பலம் தங்களுக்கு இல்லை என்பது தெரிந்தும், எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்க்கும் இந்த விவகாரத்தை கொண்டு வந்து நாடாளு மன்றத்தை செயல்பட விடாமல் முடக்கிவிட வேண்டுமென்பதுதான் பாஜவின் திட்டம். சரி ... எதற்காக இந்த அமளி உத்தி? அமளி நடக்க வேண்டும். அதன் மூலம் எதிர்க்கட்சிகள் எம்பிக் கள் வெளிநடப்பு செய்ய வேண்டும் அல்லது அவர் களை வெளியேற்றும் சூழலை உருவாக்க வேண்டும். அவை யில் குறைவான எம்பிக்களை கொண்டு மசோதாக்களை குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்ற வேண்டும். இதுதான் பாஜ போட் டுள்ள பக்கா பிளான்.

இம்முறை 100 ஆண்டுகள் பழமையான கொதிகலன் சட்டம் ரத்து செய்யப்பட்டு புதிய சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. 90 ஆண்டு பழமையான விமான சட்டத் திற்கு பதிலாக புதிய சட்டம் கொண்டு வரப்பட்டது. இதைப் பற்றி எல்லாம் அவையில் பெரிய அளவில் விவாதம் நடத்தவில்லை. இவ்வாறு விவாதம் நடத்ததால் மசோதாவில் என்ன கூறியிருக்கிறார்கள். என்னென்ன பாதகமான அம்சங்கள் உள்ளன என்பதை அறியாமலேயே நிறைவேற்றப்பட்டு விடுகின்றன. இதற்கு முந்தைய கூட்டத் தொடர்களில் அமளியை தங்களுக்குத் சாதகமாகப் பயன்படுத்தி பல முக்கியமான மசோதாக்களை பாஜக நிறைவேற்றி உள்ளது. இதற்குப் பல உதாரணங்கள் உள்ளன. கடும் சர்ச்சைக்குரிய மூன்று வேளாண் சட்டங்கள் நிறைவேற்றியபோது கூட பெரிய அளவில் விவாதம் நடத்தவில்லை. அதைவிடக் கொடுமை அந்த சட்டங்களை வாபஸ் பெறுவதற்கான மசோதா, வெறும் 4 நிமிடத்தில் எந்த விவாதமும் இல்லாமல், அமளி துமளிக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டது நினைவிருக்கலாம்.

கடந்த குளிர்கால கூட்டத் தொடரில், நாடாளுமன்றத்தின் பாதுகாப்பு குறித்து கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சி எம். பி.க்கள் 146 பேரை அதிரடியாக சஸ்பெண்ட் செய்து அந்தக் களேபரத்தைச் சாதகமாக பயன்படுத்தி, மிக முக்கியமான குற்றவியல் மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன. அதேபோல, தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்களை நியமிக்கும் குழுவில் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு பதிலாக ஒன்றிய அமைச்சரை இடம் பெறச் செய்யும் சட்ட மசோதாவும் அமளிக்கு இடையே விவாதம் இல்லாமல் நிறைவேற்றப்பட்டது. இதுபோல இன்னும் பல உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இதுவா நாடாளுமன்ற ஜனநாயகம்? நாடாளு மன்றம் அமளி நடக்கும் இடமல்ல, ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடக்க வேண்டிய இடம். எதிர்க் கட்சிகளின் கருத்துகளை அரசு காது கொடுத்து கேட்க வேண்டிய இடம். ஆக்கப்பூர்வமான விவாதங்கள் மூலம் மசோதாவில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். இதை ஆளும் தரப்பின் தோல்வியாகக் கருதக் கூடாது. ஆனால் அத்தனையும் இன்று கேலிக்கூத்தாக்கி வருகிறது. நாடாளுமன்றத்தின் மீதான நம்பிக்கையை பா.ஜ. தனது சுயநலத்திற்காக பாழாக்கி வருவது தான் வேதனையான உண்மை.

## அதிசய அவைத்தலைவர்

இதுவரை நாடாளுமன்ற வரலாற்றில் இல்லாத வகையில், மாநிலங்களவைத் தலைவரான துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கரை பதவியிலிருந்து நீக்கம் செய்ய வேண்டுமென எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மான நோட்டீசைக் கொடுத்துள்ளன. இதற்கு காரணம், தன்கர் பா.ஜ. செய்தி தொடர்பாளரைப் போல் அவையில் நடந்து கொள்வதுதான் எனக் காங்கிரஸ் குற்றம்சாட்டி உள்ளது. மாநிலங்களவையில் விதிகளை விட அரசியலுக்கு முன்னுரிமைத் தரப்படுவதாகவும் கூறி உள்ளது. பக்கச் சார்பற்றவராக இருக்க வேண்டிய அவைத் தலைவர் பக்கா பா.ஜ. தலைவராக இருப்பது தான் பிரச்னைக்குத் காரணம்.

## 20%க்கும் குறைவான மசோதாக்கள் ஆய்வு

கடந்த 17வது மக்களவை செயல்பாடு குறித்த புள்ளி விவரங்களின் படி, நிலைக் குழு உள்ளிட்ட நாடாளுமன்றக் குழுக்களின் ஆய்வுக்கு அனுப்பப்படும் மசோதாக்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்திருப்பதை அறியலாம். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் 14வது மக்களவையில் 60 சதவீத மசோதாக்களும், 15வது மக்களவையில் 71 சதவீத மசோதாக்களும் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இதுவே ஒன்றியத்தில் பா.ஜ. ஆட்சிப் பொறுப் பேற்ற பிறகு 16வது மக்களவையில் ஆய்வுக்கு அனுப்பப்பட்ட மசோதாக்களின் எண்ணிக்கை 28 சதவீதமாகவும், 17வது மக்களவையில் 16 சதவீதமாகவும் சரிந்திருக்கிறது. விவாதம் நடத்தினால் தானே ஆய்வுக்கு அனுப்புவது?

## என்ன காரணம்?

எந்த மசோதா மீதும் விவாதம் நடத்துவதை பாஜ விரும்பவில்லை. விவாதம் நடத்தினால், அந்த மசோதா வை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படும். தங்களுக்கு வேண்டிய சில முக்கிய மசோதாக்களை நிறைவேற்ற முடியாமலேயே போய்விடும். உதாரணத் திற்கு வக்பு வாரிய சட்டத் திருத்த மசோதாவுக்கு எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் இந்த மசோதா கடந்த கூட்டத்தின் போது நாடாளுமன்ற கூட்டுக்குழு ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. இம்முறை கூட்டுக்குழு பதவிக்காலம் நீட்டிக்கப்பட்டதால், இந்த மசோதா நடப்பு குளிர்கால கூட்டத்தொடரில் கொண்டு வர முடியாமல் போய் விட்டது. ஆகவே, மசோதாவை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படுவதை பா.ஜ. விரும்பவில்லை. எனவே, இப்போதெல்லாம் விவாதமே இல்லாமல் நாடாளுமன்றத்தில் குரல் வாக்கெடுப்பு மூலம் மசோதாக்கள் டான்டான் என நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

## விவாதம் வீண் வாதமா?

கடந்த 17ஆவது மக்களவையில் மொத்தம் 172 மசோதாக்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. இவற்றில் பாதி எண்ணிக்கையிலான மசோதாக்கள் 2 மணி நேரத்துக்கும் குறைவாகவே அவையில் விவாதிக்கப் பட்டிருக்கின்றன.

172 மசோதாக்களில் மக்களவையில் 16, மாநிலங்கள வையில் 11 மசோதாக்கள் மீதான விவாதத்தில் மட்டுமே 30க்கும் மேற்பட்ட எம்பிக்கள் பங்கேற்றுள்ளனர். மொத்தம் 729 தனிநபர் மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதில் 2 மசோதா மீது மட்டுமே விவாதம் நடந்துள்ளது.

2019 முதல் 2023 வரை 80 சதவீத பட்ஜெட் மசோதாக்கள் விவாதம் இன்றியே நிறைவேற்றப்பட்டுள்ளது. 2023இல் முழு பட்ஜெட்டும் விவாதம் இல்லாமல் நிறைவேற்றப்பட்டுள்ளது. 17ஆவது மக்களவையில் 35 சதவீத மசோதாக்கள் 1 மணி நேரத்திற்கும் குறைவான விவாதத்துடன் நிறைவேற்றப் பட்டுள்ளன. இவற்றில் பல விவாதங்கள் வெறும் சில நிமிடங்களில் முடிந்தவை. பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைப்பதால், நாடாளுமன்றத்தில் எந்த மசோதாவையும் அரசால் நிறைவேற்ற முடியும். ஆனால், விவாதமே இல்லாமல் அதை நிறைவேற்ற வேண்டுமென ஆளும் தரப்பு நினைப்பது தான் வேதனை.

## ஒரே நாடு ஒரே தேர்தல் சாத்தியமா?

நாடாளுமன்ற மக்களவையின் 543 தொகுதிகள், மாநிலங்களின் 4,120 சட்டப்பேரவைத் தொகுதிகள், 30 லட்சத்துக்கும் மேற்பட்ட உள்ளாட்சிப் பதவிகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது. இதுதான் ஒரே நாடு ஒரே தேர்தல். இதன் பொருள் மக்களவை, மாநில சட்டப்பேரவைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல்கள். அடுத்த 100 நாட்களுக்குள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல்கள் நடத்தப்படும். ஆனால் அவ்வாறு நடக்க வேண்டுமானால் அரசியலமைப்பு சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும். ‘ஒரே நாடு, ஒரே தேர்தல் தொடர்பான இரண்டு அரசியலமைப்புத் திருத்த மசோதாக்களுக்கு மோடி அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இவை நாடாளுமன்றத்தின் இந்தக் கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் விரிவான ஆலோசனைகளுக்காக கூட்டு நாடாளுமன்றக் குழுவிடம் (ஜே.பி.சி) ஒப்படைக்கப்படும் என்று நம்பப்படுகிறது. முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையிலான குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மோடி அரசு இரண்டு திருத்த மசோதாக்களைத் தயாரித்துள்ளது.

வரும் 2029ஆம் ஆண்டு முதல் ‘ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டம் அமலுக்கு கொண்டு வரப்படும் என்று கூறப்படுகிறது. இந்தத் திட்டத்தை செயல்படுத்த வரும் 2026ஆம் ஆண்டு டிசம்பருக்குள் 25 மாநிலங்களின் சட்டப்பேரவைத் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும். அதற்காக இரண்டு அரசியலமைப்பு திருத்த மசோதாக்கள் கொண்டு வரப்பட வேண்டும். அரசியலமைப்பில் மொத்தம் 15 திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். இதன் கீழ், புதிய விதிகள் சேர்க்கப்பட வேண்டும் மற்றும் தற்போதுள்ள விதிகள் திருத்தப்பட வேண்டும். ராம்நாத் கோவிந்த் குழுவின் கூற்றுப்படி, இந்த மசோதாக்களை நிறைவேற்ற நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது. இதற்கு மாநில அரசுகள் மற்றும் மாநில சட்டசபைகளின் ஒப்புதல் தேவையில்லை. இரண்டாவது மசோதா மாநகராட்சிகள் மற்றும் பஞ்சாயத்துகளுக்கான தேர்தல்கள் மற்றும் தலைமை தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்படும் வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வாக்காளர்கள் பட்டியலைத் தயாரிப்பது தொடர்பானது. இதில் ஒவ்வொரு வாக்காளரின் விவரங்களும், அவர் எந்த தொகுதியில் இருந்து வாக்களிக்கத் தகுதியுடையவர் என்பது பற்றிய விவரங்களும் இருக்கும். ராம்நாத் கோவிந்த் குழுவின் கூற்றுப்படி, இந்த மசோதா சட்டங்களை உருவாக்கும் முதன்மைப் பொறுப்பு மாநில அரசின் விஷயங்களுடன் தொடர்புடையது. எனவே, இந்த மசோதாவுக்கு குறைந்தபட்சம் பாதி மாநிலங்களாவது ஒப்புதல் அளிக்க வேண்டும். எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு மற்றும் பல்வேறு சிக்கல்கள் உள்ளதால் ஒரே நாடு ஒரே தேர்தல் சாத்தியமாகுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# எழுச்சியுடன் நடந்த ஜாதி ஒழிப்பு - மாவீரர் நாள்

பல்லாவரம் : சென்னை மாவட்டக் கழக சார்பில் “ஜாதி ஒழிப்பு - மாவீரர் நாள்” பொதுக்கூட்டம், 14.12.2024 அன்று, பல்லாவரம் ரங்கநாத தெருவில் நடைபெற்றது. இந்நிகழ்வை தென்சென்னை மாவட்ட அமைப்பாளர் ம.கி.எட்வின் பிரபாகரன், தாம்பரம் நகர அமைப்பாளர் அருண் கோமதி, கழகச் செயல்வீரர் அழகிரி நரேஷ் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்த பின், புரட்சிப் பாடகர் கோவன் பங்கேற்ற ம.க.இ.க. கலைக் குழுவினரின் எழுச்சிமிக்க பாடல்களுடன் பொதுக்கூட்டம் தொடங்கியது. அதனையடுத்து, மறைந்த ஈரோடு கிழக்கு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அவர்களின் படம் திறக்கப்பட்டு புகழ் வணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, “சிந்துவெளி நாகரிகமும் ஜாதியும்” என்ற தலைப்பில் ஊடகவியலாளர் இந்திரகுமார் தேரடி ஆற்றிய உரை, இளைஞர்களை வெகுவாகக் கவர்ந்தது. சரஸ்வதி நாகரிகம் எனும் பார்ப்பனப் புரட்டை உடைத்து, சிந்து நாகரிகம் நம் திராவிடர் நாகரிகமே! என்பதை நிறுவினார். ஆரிய ஊடுருவலுக்கு முன் இங்கு நால் வர்ண முறை இல்லை என்பதைச் சான்றுகளுடன் அம்பலப்படுத்தினார்.



“பாசிச சக்திகளின் வளர்ச்சியைத் தடுப்பது” குறித்துப் பேசிய மனிதநேய மக்கள் கட்சியின் மாநில துணைப் பொதுச்செயலாளர் ம.யாக்கூப், “கொள்கை லட்சியத்தோடு இவ்வளவு இளைஞர்கள் திரண்டு வந்திருப்பதை பார்க்கும்போது, ‘ஆர்எஸ்எஸ் - பாஜக மட்டுமல்ல, எந்தப் பாசிச சக்தியும் இம்மண்ணில் வேரூன்ற முடியாது’ என்பது உறுதியாகிறது” என்றார். அதனையடுத்து சொற்பொழிவாற்றிய ம.தி.மு.க. செங்கல்பட்டு வடக்கு மாவட்டச் செயலாளர் மா.வை. மகேந்திரன், “தேர்தல் அரசியல்வாதிகள் கூட பதவிக்காக சில சமரசங்களைச் செய்ய வேண்டிய நிலை வரலாம். ஆனால், இங்குக் கூடியிருக்கும் கருஞ்சட்டைக் கூட்டம் அப்படிப்பட்டதல்ல. இது கொள்கை உறுதிகொண்ட படை” என்ற கருத்தை அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்தார்.

அதனைத் தொடர்ந்து, ம.தி.மு.க. பகுதிச் செயலாளர் துரை.மணிவண்ணன், “திராவிடத்தின் இன்றைய அவசியத் தேவை” என்ற தலைப்பில் சுருக்கமாகவும், அதேநேரத்தில் ஆணி அடித்தாற்போல் கூர்மையாகவும் கருத்துகளை முன்வைத்தார். அடுத்ததாக, “ஈழச்சிக்கல்: இன்றைய நிலையும், எதிர்கால செயல்திட்டங்களும்” என்ற தலைப்பில் தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் சென்னை தெற்கு மாவட்டத் துணை அமைப்பாளர் தடா ஓ.சுந்தரம் கருத்துரையாற்றினார். இலங்கையில் பதவியேற்றிருக்கும் புதிய அரசின் மீதான விமர்சனங்களை முன்வைத்ததோடு மட்டுமல்லாமல், ஆக்கப்பூர்வமான ஈழ விடுதலைச் செயல்பாடு என்பது எப்படி இருக்க வேண்டும் என்பதையும் விளக்கிப் பேசினார்.

நிறைவாக “சட்டப்பிரிவுகளை பெரியார் தொண்டர்கள் எரித்தது ஏன்?” என்ற தலைப்பில், இளைய தலைமுறையினருக்கு புரியும் வகையில், வரலாற்றுத் தகவல்களுடன், கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்புரையாற்றினார். அரசியல் சட்ட எரிப்புப் போராட்ட வீரர்களின் தியாகங்களை நினைவுகூரும் வகையில் உரை அமைந்திருந்தது. “கடும் சிறைவாசத்தை அனுபவித்த தியாக மறவர்கள், ‘ஜாதிமறுப்புத் திருமணங்களையே அனைவரும் செய்து கொள்வோம்’ என உறுதிமொழி எடுத்துக் கொண்ட செய்தி, தோழர்கள் மத்தியில் உணர்வலைகளை ஏற்படுத்தியது. நிகழ்வில், கழக நூல்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

பொதுக்கூட்டத்துக்காக ஒரு மாத காலம் தீவிரமாக உழைத்த சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப.அருண், திருவல்லிக்கேணி பகுதித் தலைவர் சு.கோபிநாத், தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் பேரன்பு உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட தோழர்களுக்கு பயனாடை அணிவித்தும், புத்தகங்கள் வழங்கியும் சிறப்பு செய்யப்பட்டது. தோழர்களுக்கு உணவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கூட்டத்தில் பேசப்பட்டக் கருத்துகளுக்கு, பெருந்திரள் மக்கள் கூட்டத்திடமிருந்து நல்ல வரவேற்பும் ஆதரவும் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

## செயலவை மேட்டூரில் கூடுகிறது!

திராவிடர் விடுதலைக் கழகத்தின் செயலவைக் கூட்டம் வரும் 22.12.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணிக்கு சேலம் மாவட்டம் மேட்டூரில் நடைபெறுகிறது.

கழகத்தின் மாவட்ட, மாநகரத் தலைவர், செயலாளர், அமைப்பாளர் மற்றும் மாநிலப் பொறுப்பாளர்கள் தவறாமல் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

கொளத்தூர் மணி,
தலைவர்,

விடுதலை இராசேந்திரன்,
பொதுச்செயலாளர்,

## ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மறைவு கழக சார்பில் மரியாதை

சென்னை: சென்னையில் உடல்நலக் குறைவால் முடிவெய்திய தந்தை பெரியாரின் பேரனும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மூத்த தலைவருமான சட்டமன்ற உறுப்பினர் திரு. ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அவர்களின் உடலுக்கு கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் அவர்கள் மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொண்டார்.

கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி மற்றும் கழகத் தோழர்கள் உடனிருந்தனர்.

சென்னையில் நடந்தக் கழகக் கூட்ட மேடையில் முடிவெய்திய பெரியாரின் பேரன் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் படம் திறக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

## ஈரோட்டில் அமைதிப் பேரணி

ஈரோடு: சீரியப் பகுத்தறிவாளரும், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினருமான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக அமைதிப் பேரணி, 15.12.2024 அன்று ஈரோடு அரசு மருத்துவமனை அருகிலுள்ள காமராசர் சிலையிலிருந்து பன்னீர் செல்வம் பூங்கா தந்தை பெரியார் சிலை வரை நடைபெற்றது. பேரணியை திராவிடர் விடுதலைக் கழகம் ஒருங்கிணைத்தது. சமூக நீதிக் கூட்டமைப்பைச் சேர்ந்த தோழர்களும் பொதுமக்களும் பெருமளவில் கலந்துகொண்டனர்.

## இந்துத்துவா நீதிபதி கொலிஜியம் முன் ஆஜராக உத்தரவு

டிசம்பர் 8ஆம் தேதி உத்தரப்பிரதேச மாநிலம் அலகாபாத்தில் தீவிர இந் துத்துவா அமைப்பான விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பின் விழாவில் இஸ்லாமியர்களுக்கு எதிராகவும், பெரும்பான்மை சமூகம் என்ற பெயரில் வெறுப்புணர்வைத் தூண்டும் வகையில் அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி சேகர் குமார் பேசினார்.

அரசியலமைப்பைக் காக்க வேண்டிய பொறுப்பில் உள்ள நீதிபதி ஒருவர் இந்துத்துவா அமைப்பின் விழாவில் பங்கேற்றது மட்டுமல்லாமல், அந்த அமைப்பிற்கு ஆதரவாக முஸ்லிம் மக்களுக்கு எதிராகப் பேசியது நாடு முழுவதும் கடும் கண்டனம் கிளம்பியது. நீதிபதியின் பேச்சிற்கு கடும் கண்டனம் தெரிவித்த உச்சநீதிமன்றம், “விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பின் விழாவில் நீதிபதி சேகர் குமார் பேசிய சர்ச்சைக்குரிய பேச்சு குறித்த விவரங்களை அலகாபாத் உயர் நீதிமன்றம் சமர்ப்பிக்க வேண்டும்” என உத்தரவிட்டது.

அதே போல நீதிபதி சேகர் குமாரைப் பதவி நீக்கம் செய்யக் கோரி நாடாளுமன்ற மாநிலங்கள வையில் 55 எம்.பி.க்கள் அவை செயலாளரிடம் தீர்மான மனு அளித்தனர். இந்நிலையில், அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி சேகர்குமார் ஆஜராக வேண்டும் என உச்சநீதிமன்ற கொலீஜியம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக உச்சநீதிமன்ற கொலீஜியம் விடுத்துள்ள உத்தரவில், “அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி சேகர் குமார் பேசியதை ஏற்க முடியாது. அதனால் டிசம்பர் 17ஆம் தேதி நீதிபதி சேகர் குமார் தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா தலைமையிலான உச்ச நீதிமன்ற கொலீஜியம் முன் ஆஜராக வேண்டும்” எனக் கூறப்பட்டுள்ளது.

## கழக நாட்காட்டி தயாராகிறது!



- 2022 – சமூகநீதி மூலவர்களின் சிறப்பு நாட்காட்டி
- 2023 – வேத மரபு எதிர்ப்பாளர்கள் சிறப்பு நாட்காட்டி.
- 2024 – தமிழ், தமிழருக்குத் தொண்டாற்றிய வெளிநாட்டவர் சிறப்பு நாட்காட்டி.
- 2025 நாட்காட்டியில் திராவிட இயக்கக் கவிஞர்கள் நினைவுகூரப்படுகிறார்கள். வண்ணப் படங்களாக...
- விலை : ரூ.75/– முன்பதிவுக்கு:

தபசி குமரன், தலைமை நிலையச் செயலாளர்
தொடர்புக்கு: 9941756641

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : December 20, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran